TAMIZH MURASU

10 JUNE 2023

PAGE 2

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில்

# முனைவர் பட்டப்படிப்புக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

புதுச்சேரி, ஜூன் 10-

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நுழைவு தேர்வு மூலம் நிரப்பப்பட உள்ள பிஎச்டி படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதுகுறித்து பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) ராஜ்னீஷ் புதானி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் உள்ள பிஎச்டி (முனைவர் பட்டம்) படிப்புகளில் உள்ள இடங்கள் நுழைவுத் தேர்வு மூலம் நிரப்புவதற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. பாடப்பிரிவுகள், இடஒதுக்கீடு, கல்வி தகுதி உள்ளிட்டவிவரங்களுக்கு *https://www.pondiuni.edu.in/admissions-2023-24/* என்ற பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டை பார்க்கவும். இதில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி *www.pondiuni.edu.in* என்ற இணையதளத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்ப கட்டணமாக பிற மாணவர்களுக்கு ரூ.1000, எஸ்சி, எஸ்டி மாணவர்களுக்கு ரூ.500 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆன்லைனில் ஜூன் 29ம் தேதிக்குள் விண்ணப்பிங்களை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

10 JUNE 2023

PAGE 14

### புதுச்சேரி பல்கலைக்கழகத்தில்

# பிஎச்டி படிப்புக்கு ஆன்லைனில் விண்ணப்பங்கள் வரவேற்பு

**புதுச்சேரி, ஜூன் 10:** புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நுழைவு தேர்வு மூலம் நிரப்பப்பட உள்ள பிஎச்டி படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுகுறித்து பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) ராஜ்னீஷ் புதானி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் உள்ள பிஎச்டி (முனைவர் பட்டம்) படிப்புகளில் உள்ள இடங்கள் நுழைவுத் தேர்வு மூலம் நிரப்புவதற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பாடப்பிரிவுகள், இடஒதுக்கீடு, கல்வி தகுதி உள்ளிட்ட விவரங்களுக்கு *https://www.pondiuni.edu.in/admissions-2023-24/* என்ற பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டை பார்க்கவும். இதில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி *www.pondiuni.edu.in* என்ற இணையதளத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்ப கட்டணமாக பிற மாணவர்களுக்கு ரூ.1000, எஸ்சி, எஸ்டி மாணவர்களுக்கு ரூ.500 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆன்லைனில் ஜூன் 29ம் தேதிக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

MAALAI MALAR

10 JUNE 2023

PAGE 2

புதுவை பல்கலையில்

# பி.எச்.டி. படிப்புக்கு விண்ணப்பம்

புதுச்சேரி, ஜூன்.10—

புதுவை பல்கலைக்கழக பதிவாளர் ராஜ்னீஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:—

புதுவை பல்கலைக் கழகத்தில் பல்வேறு துறைகளில் உள்ள பி.எச்.டி. படிப்புகளில் உள்ள இடங்கள் நுழைவுத்தேர்வு மூலம் நிரப்ப ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. பாடப்பிரிவுக்கான இடஒதுக்கீடு, கல்வி தகுதி விபரங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை சமர்பிக்க வேண்டும். விண்ணப்ப கட்டணமாக பிற மாணவர்களுக்கு ரூ.1000, எஸ்.சி, எஸ்.டி. மாணவர்களுக்கு ரூ.500 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வருகிற 29—ந் தேதிக்குள் விண்ணப்பங்களை சமர்பிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.